# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.157/2018

2025 –ம் ஆண்டு அக்டோபர் மாதம் 07 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 07.10.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜாங்கம் (PW–2 ) | வயது | : | 65/2025 |
| த/க பெயர் | : | திரு. நடேசன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | இலக்கணாம்பேட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்தில் எட்டு வருடங்களுக்கு முன்பே கேட் போட்ட பின்னர் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கேட் போட்ட பின்னர் எவ்வளவு ஆண்டுகள் கழித்து காவல் நிலையம் சென்றேன் என்றால் உடனடியாக சென்றேன். கேட் போட்ட விசயம் கேட் போடும்போதே எனக்கு தெரியும் என்றால் சரிதான்.
2) தாவா B ஷெட்யூல் சொத்துக்கு வாதி பெயரிலும் பிரதிவாதி பெயரிலும் பட்டா உள்ளது என்றால் சரிதான். நான் சில சொத்துக்களை ராஜசேகருக்கு விற்பனை செய்தேன் என்றால் சரிதான். என்னைபோல் யார் யார் பிரதிவாதிக்கு அங்கிருந்த சொத்துக்களை விற்பனை செய்தார்கள் என்றால் முருகையனின் மருமகன் தங்கராசு மட்டும் விற்பனை செய்தார்.
3) நான் விற்பனை செய்த சொத்துக்களில் எத்தனை அடி நீளம், அகலம் கொண்ட பகுதி பொதுப்பாதையாக பயன்படுத்த வேண்டும் என்ற வாசகம் கொண்டு எழுதப்பட்டதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்த இடத்திலாவது பொதுப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.
4) எனது மகன்கள் வாங்கிய சொத்தில் வா.சா.ஆ–2 ஆவணத்தில் நான்கெல்லையில் பொதுப்பாதை என்ற வாசகம் உள்ளதா என்றால் ரோடு என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது, பொதுப்பாதை என்று சொல்லவில்லை. எத்தனை அடி நீளம், அகலம் கொண்ட பகுதியை பொதுப்பாதையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வாசகம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.
5) நான் தாவா சொத்துக்களை கிரயம் வாங்கியது 2017 இல் என்றால் சரிதான். 2017 இல் சொத்து வாங்கி 2018 இல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் பொதுப்பாதை சம்பந்தமாக எந்தவித உரிமையும் கொடுக்காததால் நாங்கள் கேட்கின்ற பரிகாரம் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உண்மையிலேயே அந்த இடமானது பொதுப்பாதையாக இருந்தால் கிரய ஆவணத்தில் குறிப்பிட்டு இருக்கும் என்றால் சரியல்ல.

6) வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு எதிராக எந்தவித பரிகாரமும் எனது மகனுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கேட் போட்டு பூட்டி எத்தனை வருடம் இருக்கும் என்றால் சுமார் எட்டு வருடம் இருக்கும். பூட்டியுள்ள இடத்தின் வழியாக எட்டு வருடமாக சென்று வரவில்லை என்றால் சரிதான்.

7) நான் சொல்லியுள்ள பொதுப்பாதையானது அரசு பதிவேட்டில் பொதுப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். எனக்கு எவ்வித உரிமையும் இல்லாத இடத்தில் பொதுப்பாதையாக விளம்புகை பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் பட்டா இடத்தில் நான் எந்தவித உரிமையும் கோராமல் அரசாங்க இடத்தில்தான் பொதுப்பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

8) பி ஷெட்யூல் சொத்தில் பாதையாக பயன்படுத்திக்கொள்ள எந்தவித உரிமையும் எங்களுக்கு இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் கிரயம் வாங்கிய அடுத்த வருடத்திலே வழக்கு தாக்கல் செய்து பொதுப்பாதை உரிமை கோருவது சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல. வாதிகள் கிரயம் பெற்ற சரத்துகளுக்கு எதிராக உரிமை கோருவது சட்டப்படி தவறானது என்பதால் வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.10 16:56:51 +0530

District Munsif,
Mannargudi.